CASE NO. CC 128/2022

Date 24.07.2025

பெயர் PW 1 – சுப்புராஜ் த/பெ செருவன்

<u>(எதிரி ஆஜர்).</u>

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) சம்பவம் ஒக்கூர் அண்ணா நகர் பேருந்து நிறுத்ததில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும்போது சம்பவம் நடந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் அண்ணா நகர் பேருந்து நிறுத்ததிற்கும் இடையே சுமார் 30 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். பேருந்து நிறுத்ததில் பேருந்து நிற்கவில்லை என்றால் சரியல்ல. பேருந்து நிறுத்ததில் ஆள்களை இறக்கிவிட்டு போகும்போது தான் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல.

2) நான் ஒரு இரு சக்கர வாகனத்திலும் எனது தம்பி மனைவி வினோதினி ஒரு இரு சக்கர வாகனத்திலும் சென்றோம் என்றால் சரிதான். எனது தம்பி மனைவி வாகனத்தில் அவருடன் சேர்த்து இரண்டு குழந்தைகள் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். நான் தனியாக இரு சக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். குழந்தைகளில் ஒருவரை நான் எனது வாகனத்தில் ஏற்றிச் செல்லாததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3) நான் சம்பவ சமயத்தில் வினோதினி வாகனத்துடன் பயணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வினோதினி வாகனத்துக்குப் பின்னால் நான் சென்றேன் என்றால் சரிதான். எனது இரு சக்கர வாகனத்தைக் கடந்து சென்று தான் பேருந்து வினோதினி வாகனத்தின் மீது மோதியது என்றால் சரிதான். வினோதியின் இரு சக்கர வாகனத்திற்கு பின்புறம் தான் பேருந்து மோதியது என்றால் சரிதான். வினோதினி சென்ற வாகனத்தின் முன்பகுதியில் தான் சேதம் என்றால் சரியல்ல.

4) காவல் நிலையத்தில் நான் தான் புகாரை எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவில் உள்ள சங்கதிகளை நான் எழுதவில்லை என்றால்

சரிதான் எனது அண்ணன் எழுதினார். எனது முதல் விசாரணையில் நான் சொல்லச் சொல்ல போலீசார் புகார் மனுவை எழுதினார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. சாட்சி பூவலிங்கம் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு தம்பி முறை ஆவார். சாட்சி செல்வக்குமார் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு சித்தப்பா மகன் முறை ஆவார்.

5) போலீசார் என்னை விசாரிக்கும்போது வினோதினி பின்னால் நான் சென்றதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அண்ணா நகர் பேருந்து நிறுத்ததிற்கும் ஈசனூர் விளக்கிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் சம்பவத்தைப் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6) பேருந்து நிறுத்ததில் பேருந்து நின்று கிளம்பியபோது பேருந்திற்குப் பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்த வினோதினி பேருந்தை கடந்து சென்றபோது எதிரே வந்த டாடா ஏசி தட்டி விட்டுதான் வினோதினி பேருந்தின் சக்கரதிற்குள் விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய டாடா ஏசி வாகனத்தை கண்டுபிடிக்க முடியாததால் நஷ்டஈடு பெற வேண்டும் என்பதற்காக பேருந்து ஓட்டுநர் மீது இந்த பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் மனு சொன்ன நாள், நேரம், தேதியில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.07.25 16:37:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

CASE NO. CC 128/2022

Date 24.07.2025

பெயர் PW 2 - பூவலிங்கம் த/பெ செருவலிங்கம்

**<u>(எதிரி ஆஜர்).</u>**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

அ.சா.1 எனது உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான் எனது அண்ணன் சொல்லித் தான் எனக்குத் தெரியும்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.07.25 16:38:06 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,

சிவகங்கை.